# மகிமைச் சிந்து.



இஃது

மதுரை ஜில்லா, பழனித் தாலூகா

தங்கச்சி யம்மாபட்டிக் கஸ்ப்பா

மேற்படி ஊரிலிருக்கும்

**V. S. R. ராமசாமிக் கவிராயரால்**

இயற்றப்பட்டு,

மதுரை விவேகானந்தா பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

1932 [விலை அணா 1.

Q25:417
N32
168157

உ

# ஸ்ரீ கொப்புடையம்மன் மகிமைச் சிந்து.

## கணபதி காப்பு வெண்பா.

அண்ணாளில் மாங்கனிக்கி ஆடமேயிலேறி
விண்ணோர் நகைத்திடவே—வேக்கிநின்ற
கண்ணன் மருகனுக்கு மூத்த
கணபதியே காப்பு.

யேகம்—தாளம்—ஆதி.

பக்திகொண் டாடுவோம்
பாவலர்கள் போற்றும்பர சிவருக மகளென வளர்கிற
கொப்புடையம்மனை யனுதினம்
மனதினில் நினைந்திட வருகுவாள் தய செய—பக்தி 1

கத்திக் துடிக்கின்றோம்
கார்சரிமா காரைக்குடி நகர்தனி லுற்றிட வெகுஜனம்
நற்றிட அவர்வரம் பெற்றிட
வருகுவா யிதுததி யெனவொரு கொடிதனில்—பக்தி 2

யெத்திசை யோர்களும் யேவல்புரி கின்றார்கள்
இதுததி வருகுவாய் உனதொரு
பதமலரனுதினம் தருகுவாய்
படிமிசை கூவினேன்—பக்தி 3

சத்திசவுந்தரி சாமுண்டியேபரம
சரிகமபதனிச வெனவொதானி
முழங்கிட மறையவர்பாடிட
அடியவர்நாடிட பக்தி கொண்டாடுவோம் 4

யாகசத்ரிய வம்சத்தில்
பலுவிரிவார் கோத்திரம்
பாடியராமசாமிக் கருள்தந்திடு
மோடியெல்லாம்விட்டுக் கூடியசீக்கிரம்—பக்தி 5

15 MAR 1932

148157

வளையல்சிந்து மெட்டு.

## மோழைக்கோட்டல்க்கும்மி.

பாவலர்கள் போற்றும் பாண்டிப் பரமனுக்கருள் மகளே—உனைப்
பணிந்து பாடினேன்புகழே—இசை
புரிகுவாயடி யிதமே—உனைப்
பணிந்து போற்றி மகிமைச்சிந்தைப் பாடினேன் வெகு விரைவாய் 1

ஆதியிலே உனதிருப்பிடம் அடர்ந்த காட்டுக்குள்ளே—செடி
படர்ந்திருந்தது தொல்லை—பால
வனம் இருந்தது சள்ளை—அதை
அறவே ஒளித்துப் பிரபல்யமாக ஆக்கினாரிது தில்லை 2

தில்லையம்பலம் போலத்தெரிகிறது சிகரத்தில் ஐந்து கலசம்—இரு
புரத்திற் சிங்கத்தின் அமுசம்—சுற்றிப்
பார்க்கும் பொம்மையின் பவுசும்—யான்
சொல்லிவார பாடல் கேட்டு ஜொலிக்கிது ஒரு லைட்டும் 3

மாடமாளிகை கூடகோபுரம் மா இலங்கையைப் போலே—மணி
கட்டியிருக்குது மேலே—கவர்
சூட்சம் வைத்தது கீழே—அதை கை
மாரி இழுத்து அடித்து விட்டால் மாபாணம் போட்டதுபோலே 4

சுற்றுவாரம் கணக்கெடுத்தேன் சொல்ல முடியாது—சொகு
சான பொம்மைகள்சீரு—ஆஞ்ச
நேயலைட்டுப் பாரு—யான்
சொல்லிவார மகிமைச்சிந்தில் சொற்குற்றங்களிருந்தால் கூறு 5

பேச்சடங்காத ஆச்சர்யமாளிகை போற்தெரிகிது கோவில்—பூக்
கடை யிருக்குதுன் தாவில்—பழம்
போட்டு விற்கிற சீரில்—உனக்குப்
படைக்கும் தேங்காய் உடைக்க வென்று துடிக்கிறார் வெகுபேரு 6

உள்னுழைந்து செல்வோமென்றால் உருட்டுதேயிரு விழிகள்—கற்ப
கட்டுதேபெரு மதிபோல்—காந்தம்
இழுக்குதேஉப நதிபோல்—மேலே
வோங்கும்குலோப் லைட்டுத்திரு வாட்சியென்ன கதிர்போல் 7

தந்தைக்குப தேசம்செய்த தமையன்பாதம் போற்றி—கருப்
பை யாரிருக்கிற நேர்த்தி—காணிக்கைக்
குடமிருக்கிற பூர்த்தி—நல்
காலம் அறிந்து செல்வோமென்றால் கட்டியிருக்குது வாச்சி 8

சன்னிதானக்கம்பிநேர் தெரிகிது சாமிகொப்புடை யம்பாள்-பல்ப்புப்
போட்டிருப்பது கம்பா — இரு
புரத்தில் வைக்கிறார் சம்பா — தயிர்ச்
சாதமும்புளி யோதரையையும் சாற்றுவார்வெகு தெம்பா 9

சாத்துப்படிக்கி நேர்த்தியுள்ளவர் தகுந்தநாட்டார் மகிமை — தனம்
சிறந்தநகரம் பொருமை — வரம்
பெருகுவார் வெகுசிருமை — அவர்
சாமியென்றாற் கரம் குவித்து தாள்பணிவது அருமை 10

மூலஸ்தானம் சுற்றிவந்தால் மோச்சமும் பெருவோமே — விசா
லாட்சியும் காணலாமே — சுப்பிர
மண்யரைத் தொழுவோமே — என்று
மூவர் பேசிக்கரம்குவிக்க முழிக்கிறார் வெகுபேரே 11

சொர்க்க மத்திப பாதளம் போலே தோன்றுகின்றது மேலே — சிப்பி
சாஸ்திரி செய்த வேலை — கம்மல்
ஜொலிக்குதுமதி போலே — உன்
சுயரூபத்தை எடுத்துக் காட்டினால் சோல்ஜர் நிற்கிது கீழே 12

முத்துவயி டூரியத்தால் மூக்கிலேபு லாக்கு — வயிரம்
கோர்த்திருக்குது ஜோக்கு — ஜடை
பில்லையிருப்பது போக்கு — பத்து
விரலிலும்கணை யாளிஉனக்கு பாமரர்களா நோக்கும் 13

எண்ணறியாப் பணிதிகளை எடுத்துப்பூட்டிக்கொண்டு — இரு
புரத்தில்மணியம் தொண்டு — அவர்
காத்தில் ஏந்துறார் பண்டு — உனக்
கெக்காலத்திலும் அடிமைபார்க்கும் சிப்பாய்மார்கள் வந்து 14

ஏலேலோ சப்தத்துடன் ஏந்திக்கொண்டார் புஜத்தில் — இரு
கரத்தால் பற்றினார் மரத்தை — அங்கே
எரியும்சேகண்டி சங்குதவண்டைகள் செவியடைக்குதுரதத்தில் 15

அந்நாளில் ராமபிரான் அம்புதொடுத்ததைப் போலே — நாட்டார்
கம்புவரிசைகள் கீழே — அடி
பட்டுவருகுது மேலே — நம்
ஆங்கிலேய சிப்பாய்மார்கள் அடக்குவார்வெகு சீரே 16

பண்டைக்காலத்தி லேற்படுத்திய பழக்கவழக்கம் போலே — பா
மார்கள்நிற்கிறார் கீழே — வடம்
பற்றியிருக்கிற தாலே — நம்
பாவலர்கள் போற்றும் கொப்புடை யம்மனிருக்கிறது மேலே 17

பதினெண்மேளம் பாண்டுவாத்தியம் பார்நடுங்குது மேலே—ஆட்டுக்
குட்டியைவெட்டுரூர் கீழே—வெஞ்சா
மரைபறக்குதா டாலே—உனக்குப்
பாக்குவெத்திலே மாத்திக்கொண்டபின் தேரிழுப்பது வேலை 18

என்று சொல்லி மகாநாட்டார் இருபுரத்திலும் சூழ்ந்தார்—வடம்
தெரியக் கைதனில் பூண்டார்—அதிர்
பாணம் போட்டது காண்டா—வனம்
எரியும் தன்மை போல் ரதம் வருகிற துரிதம் கண்டிடப்பாட்டா 19

வாய்வேக மனோவேகமாய் வந்திருக்கிறுளென்று—அக்காள்
மகிழ்ச்சிகொண்டதுகண்டு—கொப்புடை
யம்மன் கையில் செண்டு—புஸ்ப
மாரி பெய்தது போலே மானிடர் வரத்தை வாங்கினுர் பண்டு 20

வரத்தைக் கொடுத்துச் சிரத்தையோடு மாடமாளிகை சென்று
அக்காள் —மகிழ்ச்சி கொண்டது கண்டு—கொப்புடை
யம்மன் பேச்சு செண்டு—நல்
வருஷத்திலே உனதிருப்பிடம் வந்திட்டுப்போரே னென்று 21

வருசைபெற்றுத் தனதிருப்பிடம் வருவோமென்று நினைத்தால்—சுற்றி
வளைத்து நிற்கிறுர் கணக்காய்—வழி
மரித்து நிற்கிறுர் வெருப்பாய்—இன்று
மண்டபப்படியை நடத்திவிட்டு உன் சன்னதிபோகலாம் தளுக்காய் 22

என்று சொல்லி நாடுநகரம் இருதிரத்தாரும் கூடி—மண்டபப்
படிநடத்தினுர் மோடி—வாசனை
பரிமளிக்கிது கோடி—இன்று
எக்காலத்திலும் பார்த்து மகிழாத சங்கீதக்கச்சேரி ஜோடி 23

ஆடல்பாடல் மேளதாளம் அனந்தம்கொண்டது காச்சி—கொப்புடை
மகிழ்ந்துகொண்டனள் மாச்சி—நம்
ஆங்கிலேய சிப்பாய்மார்கள் அடிப்பதும்வெகு சூழ்ச்சி 24

அடித்து வெரட்டி பிடித்து இழுத்து ஆனந்தமடம் வந்தார்—இங்லீஸ்
பாண்டுவாத்தியம் கொண்டா—என்று
அனைவோர்களும் கேட்டுக்கொண்டார் பஜனைபாடினுர் துண்டா 25

பஜனைகேட்டுத் துரிதமோடு பாவை கொப்புடை யம்பாள்—பழனி
ஊர்க்கடைவெகு தெம்பா—மாக்
கரிகள்விற்கிறுர் வம்பாய்—அதைப்
பார்த்துமகிழ்ந்து ஏகாதேசி மடத்திலேவெகு சம்பா 26

சப்பாவும்புளியோதரையப்பம் சாற்றினார்வெகு நேர்த்தி-பொய்க்கால்
குதிரைநடனம் பூர்த்தி—மதுரைப்
பொன்னுச்சாமிமேளம் கீர்த்தி—மெட்ராஸ் 27
மவுண்டுரோட்டைபோலே கிராம்போன் வாசிப்பதுவெகு நேர்த்தி

இனாமல்சாப்புக் கடைகளெல்லாம் இருபுரத்திலும் உண்டு-இங்கிலீஷ்
மருந்துஷாப்புகள் ரெண்டு—காப்பி
குடித்துவாங்குவோமென்று—சிறு
இளவட்டங்கள் பேசிக்காசுக் கடைக்குப்போறார் சென்று 28

தோரணையச் சுற்றிவந்தேன் செப்பமுடியாது—தேங்காய்க்
கடைகள்வெகு ஜோரு—சிறு
மலைப்பழம்வெகு சீறு—மதுரை
மண்டபத்திலுள்ள பூக்கடைகளும் வந்திருக்குது காரில் 29

ஊரிலுள்ளாரருந்துகின்ற ஊரணியொருபாகம்—போர்ட்டுப்
போட்டிருக்கிது கோபம்—தண்ணீர்ப்
பந்தல் இருப்பது சோகம்—மகிழ
மரத்தடியில் சோம்பேரிப் பரதேசி அடிப்பது வேகம் 30

சேருமாயிரம் சிங்கார மண்டபம்போற் தெரிகிது ஆர்ஸ்—பல்ப்புப்
போட்டிருக்கிது க்கியாசு—ராஜ
குண்டு மிருப்பதுலேசு—நம்
தேவிசுந்தரி நாமதேயத்தை காட்டியிருக்கிது போர்ட்டில் 31

போர்ட்டுமகிமை எடுத்துக்கூறினேன் கோர்ட்டிருக்கிது மேலே-பைசல்
தீர்த்து நிற்கிறார் கீழே—வாயிதா
மாத்திவைக்கிறதாலே—சிவில்க்
கிரிமினல் கேசு தீர்ந்தால் விட்டிலிருப்பது வேலை 32

என்றுசொல்லி மகாஜனங்களும் இருபுரத்திலும் கூடி—சுப்பையா
செட்டியார் கட்டிய மாடி—பிரெஸ்
டெண்டாய் இருக்கிறார் க்ரீடி—நம்
இண்டியன் பினல்க் கோர்ட்டு நெம்பர்கள் இருப்பது வெகுநீதி 33

நீதி யோதும் வேதவாக்கியம் நீழ் சடையனைப் போலே—நாவண்ணா
செட்டியார் கட்டிய மாடி பல்ப்புப்
போட்டிருக்கிது மேலே—ஐந்து
நிமிசத்திற்குள் பலவிதமாய் கரண்டு செய்கிற மோடி 34

வேலைபார்த்துக் காலைத்தேய்த்து வீதிவெளியே போனால்—குட்டித்
தாச்சிநாய்களைப் போலே—எட்டிப்

பார்க்கும்-லண்டிகள் வேலை — அய்யா
இருக்கும் பணத்தைப் பரிக்க மெடிக்கல் சாப்புக்குப்போகிறார்
வீணாய் 35

சாப்புக்கடையிற் சோப்புவாங்கித் தண்ணீர்த்துரைக்குப்போனார்
திரேகம் — வெண்ணீர்போல வானார் — கடுஞ்
சூடுகொண்டது வீணா — இந்தச்
சங்கடத்தை எடுத்துச்சொன்னால் சாஸ்திரப்படி பேணார் 36

சித்திரைமாசம் தேதிகடைசியில் சீர்பொருந்திய செவ்வாய் — உனக்
கேவருகிற தெவ்வார் — மானிடர்
கூடியும்பேசுராசிவ்வார் — உன்
சித்துமகிமை எடுத்துக்கூறினேன் சேவைதந்திடுமம்மா 37

எட்டுநாள் மாவிரதம் இருக்கிறார்மகா நாட்டார் — நங்கை
துடிப்பதும்விளை யாட்டா — முறை
எடுக்கிறார்வெகு பாட்டாய் — உனக் 38
கெதிரிலுள்ள முறைகொட்டுத்திண்ணைக் கடுத்துநிற்பவர்நாட்டார்

நாட்டார்பகிமை கேட்டார்கள்செட்டி நாட்டிலேவெகு பேரு — காகம்
தண்ணீர்குடிப்பதுமேது — நாங்கள்
சொல்லி அடிப்பதுன் சீறு — இந்த 39
நாட்டுக்கோட்டையார் வாழ்கும்சீமையில் பாட்டுப்போட்டவாரு

ஆரென்றாற் சொல்லிவருகிறேன் அம்பாளேவொரு சேதி — யாக
சத்திரியரெனும் ஜாதி — பலுவிரி
வாரென்னும் ப்ரக்யாதி — உன்
ஆணையைமற வாமலேதினம் அடிக்கிறோம்கும்மி பாடி 40

பார்ப்பவரும் கேழ்ப்பவரும் பாவலர்களே வாரும் — பழி
பாவம்வல்வினை யோடும் — கொப்புடை
யம்மனைநித்தியம் பாடும் — பழக்
கடையிலே ஒரு அணாவைக் கொடுத்து புஸ்தகத்தைவாங்கிப்
பாரும் 41

பாத்துமகிழ்ந்து பூர்த்தியாக பாவைகொப்புடையம்பாளை- அநுதினமும்
போற்றுவோம்தென்பாக — வரம்
பெருகுவோம் அவள் முன்பாக — நல் 42
வரத்தைவாங்கிச் சிரத்தையோடு மதுரைக்குப்போவமென்பார்கள்

மதுரைக்குப் போவமென்றாலேவழி மரித்துநிற்குது கார்கள்-டிரைவர்
இழுப்பதும்வெகு பேர்கள் — கண்ரைக்ட்

கிழிப்பதும்கடி தாஸ்கள்— அரை
மணிக்குள்ளே புறப்படுமென்றுசொல்லி பணத்தைவாங்கினபேர்
கள் 43

பணத்தையும் கொடுத்தோமே யின்னும் பாஸஞ்சர்சேரவில்லே - மணி
பத்தடித்தது தொல்லே—டிரைவர்
சுற்றிவருவதும் சள்ளே— அய்யா 44
பணத்தையும்கொடு வென்றுமேலே அவன் பார்ப்பதுபெருங்கொள்ளே

பணத்தைக் கொடுத்துச் சனியன் விலேக்கு வாங்கினேமடி யென்று-பா
மார்கள் பேசுனர் நின்று—டிரைவர்
பார்க்கிறார் கோபம் கொண்டு—நீ
பணம் கொடுத்தாரிடத்திலே பாத்திட்டுவாரும் சென்று 45

சொன்னவுடன் மீசைதுடிக்குது சோல்ஜர் நிற்கிறார் கீழே—டிரெங்குப்
பெட்டியிருக்குது மேலே—லக்கேஜ்
போட்டிருக்கிறதாலே—அய்யா
சுருட்டி உருட்டிக் கழுத்தைப் பிடித்து இழுத்து நிற்கிறார்
கீழே 46

எத்தனேயோ மாஜனங்களும் இருவருக்குள்ள தாவா— பணம்
கொடுத்தாற் தீர்வது கோவா—என்று
இருவருக்குள்ள வழக்கைத் தீர்த்து பணத்தைக் கொடுக்கப்
போனர் 47

மதுரைஜில்லா பழனித்தாலூக்கா தங்கச்சிமாநகர் வாசன்—ராம
சாமியென்று பேர் தாசன்—கவி
வாணர் மெச்சிய நேசன்—நின்
ஞமத்தை மறவாமலே தினம் தினம் நாட்டினர் விசுவாசன் 48

முத்தாலம்மன்மீது பாடிய சுத்துப்பொங்கல் பாட்டு. தாளம்-ஆதி.

சுத்துப்பொங்கல் கேழ்க்கவென ரூலி நீயும்சும்மா
முத்தாத்தா ளென்னுமோ ரம்மா—உனக்குச்
சோறுவேணும் காதலினல் சோகமுமா கும்மா 1

மெத்தச்சனம் கூடிநிற்கிற வேடிக்கையைப் பார்த்தால்—அங்கே
மேட்டுமைதானத்தா—நல்ல
மேளதாளங்கள் வானக்காச்சியும் ஆளழகிலே கூத்தா 2

முன்றுகல்வி ஞலேஅந்தாத் தோன்றுதுபா ரடுப்பு—அங்கே
மூட்டினர்கள் நெருப்பு—அந்த
முன்னேநிற்கிற கன்னிமார்கள் சன்னேச்சாடை சிரிப்பு 3

தட்டச்சட்டி குண்டாவிலே சம்பாநல்ல அரிசி—அதைத்
தண்ணீரூத்தி அலசி—சாமி
யுந்த ஞலேபொங்கல் ஆனவுடன் விரசி 4

அள்ளிப்போட்டுக் கிண்டிவெந்து ஆனபிறகு மூடி
வீட்டுக்குத்தா னேடி
அவரவர்கள் கையிற்சாமா ஞனமட்டும் தேடி 5

தேங்காய்பழம் மாவுடனே தினேமாவிலே தீபம்—உனக்குச்
செய்துமென்ன கோபம்—சிக்கில்
நன்ருய்த் திம்போம் சிக்கா விட்டால்மனஸ் தாபம் 6

வண்ணுமாத்தை விரித்ததிலே மாவழக்கை வச்சு—ஊர்
வழக்கம் மெச்சு
மங்கையர்கள் கூட்டத்திலே வெங்கலமணி அடிச்சு 7

சக்கிலிக்கு முக்குகளும் மிக்கவக்காத் தப்பு
குச்சிலடிப்பு
சஞ்சனகு நெகுநெகுன தகதகன முடிப்பு 8

பத்திக்குச்சி சூடத்திலே பகபதியைப் பொருத்தி
புதுமலர்கள் சாற்றி—அங்கே
பாக்கு வெத்திலே பங்கிப்போடுவார் ஊர்க்குளுள்ளவர் மாத்தி 9

அட்டமாசித்தி நடத்தும் எட்டுனல்லைக்காரி—அடி
கட்டழகிமாரி—உன்
அழுமைகற்றிலே பழமைகற்றிலே அம்மம்மா சிங்காரி 10

கனகருமசாமி சொன்ன கட்டுரைப்படி அம்மா—கவி
பாடினர் வெகுகும்மா—காலே
நேரமும் மாலே நேரமும் மறையோதுகின்றவர் பிர்மா 11

முற்றிற்று.

148157

# அறிவிப்பு.

இதனால் சகலகனதனவான்களுக்குந் தெரியப்படுத்துவது யாதெனில் அமிழ்தினும் யினிது தமிழ்மொழியாகும் யென்ற ஆன்றோர் வாக்கிய பிரகாரம் இயல்இசை நாடகமென்னும் முத்தமிழையும் ஒருங்குசேர்த்துப் பாடிய பாடல்களை விரும்புவோர்களுக்கு பலவிதமான வர்ண மெட்டுகளிற்பாடி நம்மனப்பூர்த்தியாக அச்சிட்டுக்கொடுக்கப்படும். அதன்னியில் நமது ஆர்டரில்லாத படிக்கி இதிலுள்ள பாடல்களை அச்சிடுவார்களேயானல் இண்டியன் பினல்கோர்ட்டுப் பிரகாரம் அமுல் நடத்தி நாம் கோரிய நஷ்டத்திற்குப் பாத்தியப்படுவீர்களென்று இதன் மூலமாய் கண்டிப்பாய்த் தெரியப்படுத்திருக்கிறேன்.

நம் பாடல்களை விரும்பும் வியாபாரிகளுக்கும் பிரத்தியேகமாய் உள்ளவர்களுக்கும் சட்டவிரோதமில்லாத பாடல்களை அதிவிமரிசையாய்ப்பாடி வி. பி. மூலமாவது அல்லது நேரிலாவது தந்திபோல் பாவித்து அனுப்பிவைக்கப்படும்.

இப்படிக்கு

தங்கள் ஆர்டர் எதிர்பார்க்கும்

**V. S. R. ராமசாமிக் கவிராயர்.**

தற்சமயம் நமது விலாசம்

பூசவழவுச்செட்டியார் வீடு

காரைக்குடி

என்று விபரமாய் எழுதவும்.